# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் - 05.06.2025**

**முன்னிலை**

## திரு முகம்மது ஷகீல் அ்ஃதர், இகாப (ஓய்வு)
## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

## வழக்கு எண். SA 20142/SCIC/2023

திருமதி.V.குமுதம் க/பெ.M.வேணுகோபால் மேல்முறையீட்டாளர்
எண்.3, திருவந்திபுரம் மெயின்ரோடு
கூத்தப்பாக்கம்,
கடலூர் - 607 002

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்டப் பதிவாளர் ....... பொதுஅதிகார அமைப்பு
மாவட்டப் பதிவாளர் அலுவலகம்
சிதம்பரம்.

**ஆணை**

| | | |
|---|---|---|
| 1. | மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு | 05.03.2022 |
| 2. | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 116.03.2022 |
| 3. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 12.08.2023 |
| 4. | மேல்முறையீட்டு அலுவலரின் பதில் | 17.08.2023 |
| 5. | இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 17.11.2023 |
| 6 | பின்னர் பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 10.10.2024 |
| 7. | மனுதாரரின் ஆட்சேபணை மனு | 17.12.2024 |

1. மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர் / மாவட்டப் பதிவாளர் அலுவலகம், சிதம்பரம் பதிவு மாவட்டம் அவர்களுக்கு அனுப்பிய மனுவில், கீழ்க்கண்டவாறு கோரியுள்ளார், "பார்வை- சிதம்பரம் மாவட்டப் பதிவாளர், திருமதி ச.மகாலட்சுமி அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.3330/ஆ1/2021 நாள் 24/04/2022 - பார்வையில் கண்ட செயல்முறை ஆணையில் வில்லியநல்லூர் கிராம நிர்வாக அலுவலர் அவர்களின் வாக்குமூலம் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி கிராம நிர்வாக அலுவலர் வில்லியநல்லூர் கிராம சர்வே எண்.128/4C. 54/16G மற்றும் 11/8B2B சம்மந்தமாக அளித்த வாக்குமூல நகல் தேவை" என்பன போன்று 7 (ஏழு) இனங்களில் தகவல்களை வழங்கக் கோரியுள்ளார்.

**2. இன்றைய (05/06/2025) காணொளி காட்சி வாயிலான விசாரணைக்கு மனுதாரர் தனது மகன் திரு.பாஸ்கர் என்பவருடன் கடலூர் மாவட்ட ஆட்சியரகத்திலிருந்து கலந்து கொண்டார். பொது அதிகார அமைப்பின் சார்பில், ஆணையத்தின் முன் திருமதி / செல்வி.ரா.தனலட்சுமி, மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்), சிதம்பரம் பதிவு மாவட்டம் அவர்கள் ஆஜராகி மனுதாரருக்கு ஏற்கனவே, 16/03/2022 தேதியிட்ட கடிதம் வாயிலாகவும், மீண்டும் 10/10/2024 தேதியிட்ட கடிதம் வாயிலாகவும் தகவல்களை அனுப்பியுள்ளதாகத் தெரிவித்தார். மனுதாரர், 17/12/2024 தேதியிட்டு தனது ஆட்சேபணை மனுவினை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார்.**

**3. இன்றைய விசாரணையின்போது, பொதுத் தகவல் அலுவலர், சமீபத்திய இனவாரியான, 30/05/2025 தேதியிட்டு மனுதாரருக்கு தங்கள் அலுவலக ஆவணங்களின்படியான தகவல்களை அனுப்பியுள்ளதாகத் தெரிவித்து, அதன் நகலை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். மனுதாரரும், மேற்குறிப்பிட்ட தகவலைப் பெற்றுக்கொண்டதாக ஒப்புதல் தெரிவித்ததோடு, அத்தகவலில் குறிப்பிடப்பட்டுள்ள இனம் 1, 2-க்கான தகவல் தவறான புல எண்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும், தான் கோரியவாறான புல எண்களுக்கு தகவல்களை வழங்கவில்லை எனப் புகார் தெரிவித்தார். அதற்கு பொதுத் தகவல் அலுவலர், அலுவலக ஆவணங்களின்படியான தகவலையே வழங்கியுள்ளதாகத் தெரிவித்தார். ஆனால், மனுதாரரின் பிரதிநிதி தெரிவிக்கையில் தனக்கு 16/03/2022 தேதியிட்டு அனுப்பிய தகவலில் கட்டணம் செலுத்தி, தான் கோரிய தகவல் அறியும் உரிமைச் சட்ட மனுவில் குறிப்பிடப்பட்ட புல எண்களுக்கான ஆவண நகல்களைப் பெற்றுக் கொள்ள தெரிவிக்கப்பட்டிருந்ததாகவும், ஆனால் தற்போது மாவட்டப் பதிவாளர், தவறான புல எண்களுக்கான தகவலை / நகலை வழங்கியிருப்பதாகவும் தெரிவித்தார்.**

**4. எனவே, அப்போதைய (16/03/2022 தேதிய) மாவட்டப் பதிவாளர், திருமதி/ செல்வி.மகாலட்சுமி, (தற்போது) மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்), விருத்தாசலம் பதிவு மாவட்டம் அவர்கள் மேற்குறிப்பிட்ட தவறான தகவலை மனுதாரருக்கு வழங்கியதற்காக பிரிவு 20(1) மற்றும் 20(2) பிரிவின் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதற்கான காரண விளக்கத்தை, இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள் தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் பெற்று அதனை ஆணையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது. இன்றைய விசாரணையின் போது ஆஜரான பொதுத் தகவல்**

**அலுவலர்/ மாவட்டப் பதிவாளர், சிதம்பரம் பதிவு மாவட்டம் அவர்கள் சமீபத்திய 30/05/2025 தேதியிட்ட தகவலை ஆணையம் பரிசீலனை செய்து, ஆவணங்களின்படியான உரிய தகவலை அனுப்பியிருப்பதாக பதிவு செய்து, ஆணையம் ஏற்கிறது. எனவே, இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஒம்./-(முகம்மது ஷகீல் அ்தர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 20142/SCIC/2023</u>**

**பெறுநர்**

**பொதுஅதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்டப் பதிவாளர்
மாவட்டப் பதிவாளர் அலுவலகம்
சிதம்பரம்.

2.திருமதி /செல்வி. மகாலட்சுமி
முன்னாள் பொதுத் தகவல் அலுவலர்
(தற்போது) மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்)
விருத்தாசலம் பதிவு மாவட்டம்
விருத்தாசலம்.

**மேல்முறையீட்டாளர்**

திருமதி.V.குமுதம் க/பெ.M.வேணுகோபால்
எண்.3, திருவந்திபுரம் மெயின்ரோடு
கூத்தப்பாக்கம், கடலூர் - 607 002.

நகல்

1.பதிவுத்துறைத் தலைவர்
பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம்
பட்டினப்பாக்கம், சென்னை-600 028.

2.பதிவாளர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்
நந்தனம், சென்னை-600 035.

RG/PC